**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>CC.NO- 190/2019</u>**

**Dated :03.03.2026**

**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW2 Examined as PW2 (Eye Witness )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்தோஷ்குமார் | வயது | : | 24 |
| தந்தை பெயர் | : | செல்வம் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | பெருங்களூர் | தொழில் | : | ஓட்டுநர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

( 1, 3 எதிரிகள் ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி சதீஸ்-ஐ எனக்கு தெரியும். அ.சா.1 -ஐ எனக்கு தெரியும். அவர் எனது நண்பர் ஆவார். கடந்த 16.07.2018 ஆம் தேதியன்று, மாலை சுமார் 05.00 மணியளவில், பெருங்களூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு பின்புறம் உள்ள, மைதானத்தில் ஹேண்ட்பால் விளையாடுவதற்காக கயிறு கட்டி நானும் அ.சா.1-ம் கோடு போட்டுக்கொண்டிருந்தோம். அப்போது, இளம்பிழையாளி கோடு போடும் கயிற்றை தாண்டினார். அதனால் கயிறு அறுந்து விட்டது. அ.சா.1 அவரிடம் ஏன் கயிற்றை தாண்டுகிறாய் என்று கேட்ட போது, அவர் நான் அப்படி தான் தாண்டுவேன் உன்னால் என்ன செய்ய முடியும் என்று சொன்னார். அதனால் வாக்குவாதம் ஏற்பட்டது. அருகில் இருந்த நாங்கள் இருவரையும் விலக்கிவிட்டோம்.

2) மறுநாள் 17.07.2018 ஆம் தேதி, பள்ளி முடிந்த பிறகு, பள்ளிக்கு பின்புறம் உள்ள ஹேண்ட்பால் மைதானத்தில் மாலை சுமார் 5.00 மணியளவில் நானும் எனது நண்பர்களும் கிருஷ்ணமூர்த்தி, இளவரசன், முருகராஜ், கிருத்திக், சிவக்கிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோர் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது, இளம்பிழையாளி அ.சா.1யிடம் வந்து, அண்ணன்

கூப்பிடுவதாக சொல்லி, மைதானத்திற்கு வெளியே, அழைத்துச்சென்றார். **அ.சா**.1 சென்ற போது, இளம்பிழையாளி இவன் தான் நேற்று என்னை கோடு போடும் போது திட்டினான் என்று செல்லமணி, சதிஷ், லோகேஷ் ஆகியோரிடம் சொன்னார். எதிரி செல்லமணி ஆர்எஸ்பதி குச்சி எடுத்து, அ.சா.1-இன் இடது புற கண் புருவத்தில் அடித்தார். அடித்து விட்டு, 1ஆம் எதிரி செல்லமணி அ.சா.1-ஐ, புண்டை மகனே என்று அசிங்கமாக திட்டினார். அதன் பிறகு எதிரிகள் செல்லமணி, சதிஷ், லோகேஷ் ஆகியோர் கையால் அ.சா.-1இன் கன்னத்திலும் முதுகிலும் அடித்தார்கள். 1ஆம் எதிரி முதலில் அ.சா.1-ஐ தாக்கிய சத்தம் கேட்டு, நான் இளவரசன், ஷேக் அப்துல்லா, தமிழரசன், முருகராஜ், மணிபாரதி, பிரகாஷ் ஆகியோர் அங்கு வந்து சண்டையை விலக்கிவிட்டோம்.

3) சம்பவத்தில் காயமடைந்த அ.சா.1-ஐ பெருங்களூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை அ.சா.1-க்கு அளிக்கப்பட்டது. பின்னர், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு சரியாக சிகிச்சை அளிக்கவில்லை என்பதால் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம் 1ஆம் எதிரி தாக்கியதில் அ.சா.1க்கு இடது கண்ணில் பார்வை போய்விட்டது. அ.சா.1-க்கு இடது பக்கம் செயற்கை பளிங்கு கண் பொருத்தப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1,2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) போலிசார் விசாரணையில் அ.சா.1-ஐ மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும் அங்கு சரியாக சிகிச்சை அளிக்கவில்லை என்பதால் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம் என்றும் 1ஆம் எதிரி தாக்கியதில் அ.சா.1க்கு இடது கண்ணில் பார்வை போய்விட்டது என்றும் அ.சா.1-க்கு இடது பக்கம் செயற்கை பளிங்கு கண் பொருத்தப்பட்டுள்ளது என்றும் சொன்னேனா என்றால் போலிசார் என்னை விசாரித்த போது, அ.சா.1 புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார், அதற்கு பிறகு மேற்படி சம்பவங்கள் நடைபெற்றதால், அதனை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை.

2) அ.சா.1 பெருங்களூர் மற்றும் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாக சொல்வது தவறு என்றாலும் அதற்கான மருத்துவ ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் எனக்கு என்ன வயது என்றால் 17 ஆகும். நானும் அ.சா.1 ம் மற்றும் எனது நண்பர்கள் சேர்ந்து இளம்பிழையாளியை தாக்கி காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் நான் பதினொராம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். நான் படித்த மேல்நிலைப்பள்ளி, சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் எடுக்கப்பட்ட பள்ளி, அதில் பின்வாசலில் இரண்டு பின்புற கேட்டுகள் இருந்தது என்றால் நான் படித்த காலத்தில் பின் வாசலில் ஒரு கேட் இருந்தது.

3) நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் பள்ளி காம்பவுண்ட் சுவருக்கு மேற்கு புறம் நடைபெற்றது என்றால் திசை தெரியவில்லை, பள்ளிக்கு பின்புறம் நடைபெற்றது. நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் பள்ளி காம்பவுண்ட் சுவருக்கு வெளியில் நடந்ததா என்றால் காம்பவுண்ட் சுவருக்கு வெளியில் அதன் அருகில் தான் நடைபெற்றது. காம்பவுண்ட் சுவரில் இருந்து, எவ்வளவு தூரத்தில் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்றால் சுமார் 7 மீட்டர் தூரத்தில் நடைபெற்றது. குச்சியை காம்பவுண்ட் சுவருக்கு உள்ளே பள்ளியில் இருந்து தான் எடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் குச்சியை எடுத்து அடித்ததாக சொல்லியுள்ளேன், எங்கிருந்து எடுத்தார்கள் என்று சொல்லவில்லை. குச்சியை யார் எடுத்தார்கள் என்றால் செல்லமணி, லோகேஷ், சதிஷ் ஆகியோர் வெளியில் இருந்தார்கள். இளம்பிழையாளியின் நண்பர் ஒருவர் குச்சியை எடுத்து அவர்களிடம் கொடுத்தார், அவர் பெயர் எனக்கு தெரியவில்லை.

4) எங்கள் பள்ளி மைதானம், பள்ளிக்கு எந்த பக்கம் உள்ளது என்றால் பள்ளிக்கு பின்புறம் உள்ளது. போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல, விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணையில், சத்தம் கேட்டு விளையாடிக்கொண்டிருந்த நாங்கள் ஓடி வந்ததை பார்த்துவிட்டு, எதிரிகள் நால்வரும் ஓடிவிட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நாங்கள் விளையாடிக்கொண்டிருந்த இடத்திலிருந்த இடத்திலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சுமார் 100 மீட்டர் தூரம் இருக்குமா என்றால் சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும். இடைப்பட்ட தூரத்தில் தான் தடுப்புச்சுவர் இருந்தது என்றால் சரிதான், சுமார் 6 அடி உயரத்தில் தடுப்புச்சுவர் இருந்தது.

5) பெருங்களூர் அரசு மருத்துவமனையில், நான் வாக்குமூலம் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். நான் அ.சா.1-ஐ மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லவில்லை என்றாலும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான், அ.சா.1 மற்றும் எனது நண்பர்கள் இளம்பிழையாளியை தாக்கி காயம் ஏற்படுத்தி, அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த தேதி, மாதம், வருடம், என்ன பெயர் கொண்ட போலிசார்

என்னை விசாரித்தார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் 17.07.2018 ஆம் தேதி சம்பவம் நடைபெற்றது. அதிலிருந்து இரண்டு நாள்கள் கழித்து உதவி ஆய்வாளர் பழனி என்பவர் என்னை விசாரித்தார். இரண்டு நாள்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்குசம்பவத்திற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>3 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுவதாக கூறி பதிவு செய்யப்படுகிறது.**

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.04 15:31:10 +0530

**நா.சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 190/2019**

**Dated :03.03.2026**

**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW3 Examined as PW3 (Eye Witness )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **பிரகாஷ்** | வயது | : | 24 |
| தந்தை பெயர் | : | பால்ராஜ் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | பெருங்களூர் | தொழில் | : | போட்டித் தேர்வு |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

( 1, 3 எதிரிகள் ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து அரசு வேலைக்காக போட்டித்தேர்விற்கு படித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி சதீஸ்-ஐ எனக்கு தெரியும். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் எனது நண்பர்கள் ஆவார்கள். கடந்த 17.07.2018 ஆம் தேதியன்று, மாலை சுமார் 04.30 மணியில் இருந்து , பெருங்களூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு பின்புறம் உள்ள, மைதானத்தில், நானும் கிருஷ்ணமூர்த்தி, இளவரசன், முருகராஜ், கிருத்திக், சிவக்கிருஷ்ணன், மணிபாரதி ஆகியோர் ஹேண்ட்பால் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது சுமார் 05.00 மணியளவில், டிரிங்ஸ் இடைவெளிக்காக பள்ளிக்கு முன்பாக சென்றிருந்தேன். தண்ணீர் குடித்துவிட்டு மீண்டும் மைதானத்திற்கு வந்த போது, எதிரிகள் அ.சா.1-ஐ அடித்துவிட்டதாக சொன்னார்கள். நான் பார்த்த போது, அ.சா.1-இன் இடது கண்ணில் அடிபட்டிருந்தது.

2) சம்பவத்தில் காயமடைந்த அ.சா.1-ஐ பெருங்களூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை அ.சா.1-க்கு அளிக்கப்பட்டது. பின்னர், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி

மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். ரொம்ப நாள் கழித்து விசாரித்த போது, அ.சா.1 இடது கண்ணில் பிளாஸ்டிக் சர்ஜரி செய்திருப்பதாக சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1,2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் விசாரணையில் அ.சா.1 பிளாஸ்டிக் சர்ஜரி செய்திருப்பதாக சொன்னதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தண்ணீர் குடிப்பதற்காக பள்ளிக்கு வெளியில் சென்றேனா என்றால் பள்ளிக்கு உள்ளேயே பிரின்சிபால் அறைக்கு அருகில், தண்ணீர் குடிக்க சென்றேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மாலை 05.00 மணி அளவில் நான், இளவரசன், முருகராஜ், கிருத்திக், சிவக்கிருஷ்ணன், மணிபாரதி ஆகியோர் தண்ணீர் குடிக்க சென்றோமா என்றால் நான், கிருத்திக், முருகராஜ், மணிபாரதி ஆகியோர் சென்றோம். முதல் விசாரணையில் அனைவரும் சேர்ந்து தண்ணீர் குடிக்க சென்றதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல, நாங்கள் அனைவரும் தண்ணீர் குடிக்க செல்லவில்லை. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சத்தம் கேட்டு தான் அங்கு சென்றேன் என்றாலும் சரிதான். எந்த தேதி, மாதம், வருடம், என்ன பெயர் கொண்ட போலிசார் என்னை விசாரித்தார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான்.

**<u>3 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுவதாக கூறி பதிவு செய்யப்படுகிறது.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.04 15:31:22 +0530

**நா.சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கந்தர்வகோட்டை.**